தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, கார்த்திகை 20, திருவள்ளுவர் ஆண்டு-2049

2018 டிசம்பர் 6, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் பிற்பகல் 4-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.”

ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி எண்ணியபடி செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால், அவர் எண்ணியபடியே செயலில் வெற்றி அடைவார்.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.***]**

1. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 33-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை விதி 33-ஐத் தளர்த்துதல். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2. அரசினர் தனித் தீர்மானம்

காவேரி படுகையில் மேகதாது அல்லது வேறு எந்தவொரு இடத்திலும் தமிழ்நாட்டின் இசைவின்றி எவ்வித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என கர்நாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மேகதாது அணை பிரச்சினை குறித்த தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி உரிமையை மீட்டெடுக்க கால் நூற்றாண்டுக்கும் மேலாக தொடர் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டு, விவசாயம் செழிக்க செய்திட்ட தெய்வத் திருமகள் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட, நெடிய சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் தமிழ்நாட்டுக்கு உரிய காவேரி நீர் கிடைக்கும் என்று நாம் அனைவரும் எதிர்பார்க்கும் இந்த நேரத்தில், மத்திய நீர்வளக் குழுமம் கர்நாடகத்திலுள்ள மேகதாதுவில் அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடக அரசுக்கு 22-11-2018 அன்று அனுமதி வழங்கிய செயல் நம் அனைவரையும் மிகவும் கொதிப்படைய வைத்திருக்கிறது. இதைத் தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் கடுமையாக எதிர்த்து வருகின்றோம். இந்த நிலையில் தமிழ்நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்தும் வகையில், நாம் அனைவரும் ஒருமித்த